சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி: 044-2951 5590

**ஆணை நாள் – 05.01.2022**

**முன்னிலை**

**திரு சு. முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA.4089/D/2021**

திரு S. அசன் முஹம்மது -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர் (நிர்வாகம்),
பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
கடலூர் மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 10.11.2020 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 19.11.2020 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 14.12.2020 |
| மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு மாற்றப்பட்ட நாள் | 18.12.2020 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 20.01.2021 |

****

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் கடலூர் மாவட்ட ஆட்சியரக அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் வட்டம், மங்களம்பேட்டை பேரூராட்சியின் M.புக் (தீர்மான புத்தகத்தின்) சான்றொப்பமிட்ட ஒளிநகல், இப்பேரூராட்சியில் கடந்த 10 ஆண்டு காலமாக எத்தனை நபர்கள் புதிதாக வீடு கட்ட அனுமதி பெற்றுள்ளனர் என்ற விவரம் மற்றும் அவர்களிடம் அனுமதி கட்டணமாக எவ்வளவு ரூபாய் இதுவரை பெறப்பட்டுள்ளது என்ற முழு விவரம், புதிதாக வீடு கட்ட அனுமதி வழங்குவது சம்பந்தமாக இயற்றப்பட்ட தீர்மானத்தின் முழு விவரம், புதிதாக வீடு கட்ட அனுமதி பெறுபவரிடம் எதன் அடிப்படையில் அனுமதி கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்ற முழு விவரம் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 7 இனங்களில் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

2. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்த பின்னரும் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு 08.12.2021 அன்று தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இவ்வாணையத்தின் 08.12.2021 நாளிட்ட விசாரணையில் கீழ்க்கண்ட உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன :-

> *3. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(3)-ன்கீழ், மங்களம்பேட்டை பேரூராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டது என்றும், அப்பேரூராட்சியின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை.*
>
> *4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், இவ்வழக்கு எதிர்வரும்* ***05.01.2022 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு தொலைபேசி வாயிலான விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது****. அன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்கும்பொருட்டு, கடலூர் மாவட்டம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக அலுவலக செயல் அலுவலர் (நிர்வாகம்) மற்றும் மனுதாரர் ஆகியோர் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது. இது தொடர்பாக வேறு ஏதேனும் விவரம் தேவைப்படின், இவ்வாணையத்தின் 044-29515518 / 9499933592 என்ற எண்களை தொடர்பு கொள்ளலாம்.*

4. இவ்வழக்கு இவ்வாணையத்தால் இன்று 05.01.2022 நடத்தப்பட்ட தொலைபேசி வாயிலான விசாரணையில், மனுதாரர் திரு S. அசன் முஹம்மது மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு. மூவேந்திரபாண்டியன், செயல் அலுவலர் (நிர்வாகம்), பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக அலுவலகம், கடலூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றார்கள்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மங்களம்பேட்டை பேரூராட்சியின் வாயிலாக தனக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்று மனுதாரர் ஏற்பளிப்புச் செய்ததை இவ்வாணையம் பதிவு செய்து, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**பிரிவு அலுவலர் / பிரிவு பதிவாளர்**

**வழக்கு எண். SA.4089/D/2021**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர் (நிர்வாகம்),
பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக அலுவலகம்,
கடலூர் மாவட்டம்.

**<u>வழக்கு எண். SA.4089/D/2021</u>**

**<u>மனுதாரர்:-</u>**

திரு S. அசன் முஹம்மது,
எண்.174, உளுந்தூர்பேட்டை மெயின் ரோடு,
மங்கலம்பேட்டை - 606 104,
கடலூர் மாவட்டம்.

Copy to: File
SNPA / 10.01.2022

**<u>மனுதாரர்கள் கவனத்திற்கு:</u>**

- *RTI மனுக்கள் மூலம் மாவட்ட அலுவலகங்களில் பெறப்படவேண்டிய தகவல்களை நேரடியாக சென்னை தலைமைச் செயலகம் மற்றும் தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகிறது. இதனைத் தவிர்த்து,*
- *RTI மனுக்களை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு அனுப்பவும், பின்பு மேல்முறையீடுகள் செய்யவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.*
- *இதனால் அரசு பொது அதிகார அமைப்புகளுக்கு ஏற்படும் பணிச்சுமை மற்றும் நிதிச்சுமை தவிர்க்கப்படும்.*

**<u>பொது தகவல் அலுவலர்கள் கவனத்திற்கு:</u>**

- *பொது அதிகார அமைப்புகள் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கும் தகவல்களின் நகல்களை (Copies) ஆணையத்திற்கும், உயர் அலுவலகங்களுக்கும் அனுப்புவதை தவிர்க்கவும்.*
- *நகல்கள் (Copies) மேல்முறையீட்டின் மீதான விசாரணையின் போது சமர்ப்பித்தால் போதுமானது.*
- *இதனால் அரசு பொது அதிகார அமைப்புகளுக்கு ஏற்படும் பணிச்சுமை மற்றும் நிதிச்சுமை தவிர்க்கப்படும்.*